தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பன்னிரெண்டாவது அறிக்கை

"வேளாண்மை" குறித்து 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 20 FEB 2020)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பன்னிரெண்டாவது அறிக்கை

"வேளாண்மை' குறித்து 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

பொருளடக்கம்

		பக்கங்கள்
மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2018–2020)	...	iii
முன்னுரை	...	v
"வேளாண்மை' குறித்து 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.	...	1

இணைப்புகள்

இணைப்பு – 1	துறையால் நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்ற பரிந்துரைகள்	3–22
இணைப்பு – 2	பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றவை	23–42
இணைப்பு – 3	துறையிடமிருந்து பதில் வரப்பெற்று நடவடிக்கைகள் மேலும் தொடரப் பெற வேண்டிய பரிந்துரைகள்	42–48

தமிழ்நாடு சட்டமன்றம் TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2018–2020)

(பதினைந்தாவது பேரவை)

(5.7.2018–ஆம் நாள் அமைக்கப்பெற்று 31.03.2020 வரை நீட்டிக்கப்பட்டது)

தலைவர்

1. திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்,
துணை முதலமைச்சர் (அலுவல் காரணமாக)

3. திரு. துரைமுருகன்,
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)

4. திரு. S. செம்மலை,
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)

5. திரு. C.V. இராஜேந்திரன்

6. திரு. இ. கருணாநிதி

7. திரு. ஆர். காந்தி

8. திரு. V.S. காளிமுத்து

9. திருமதி ப. சத்யா

10. திரு. சி. சந்திரசேகரன்

11. திரு. எஸ்.எஸ். சரவணன்

12. திரு. M. செல்வராசு

13. திரு. அ. நடராஜன்

14. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்

15. முனைவர் க. பொன்முடி

16. திரு. கி. மாணிக்கம்

17. திரு. M.K. மோகன்

18. திரு. வி.ஜி. ராஜேந்திரன்

19. திரு. வாகை சந்திரசேகர்

செயலகம்

திரு. கி. சீனிவாசன் . . செயலாளர்

திரு. அ. அய்யன்பெருமாள் . . இணைச் செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2018–2020)

முன்னுரை

1. "வேளாண்மை" குறித்து 2007–2008–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) 12.05.2008–ஆம் நாளன்று பேரவைக்கு அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகளை ஆய்வு செய்து அளிக்கப்பெறும் அறிக்கையாகும்.

2. 2018–2020–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 5.7.2018 ஆம் நாளன்று அமைக்கப்பெற்று 2020–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாள் வரை நீட்டிக்கப்பட்டது.

3. குழு 31.10.2019–ஆம் நாளன்று சென்னையில் கூடி மேலே பத்தி 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது துறை எடுத்த நடவடிக்கைப் பட்டியலை ஆய்வு செய்தது.

4. 31.10.2019–ஆம் நாளன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு ஒப்புதல் அளித்தது.

5. குழுவின் பணிகளுக்கு உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சென்னை – 600 009,
நாள்: 31.10.2019
விகாரி, ஐப்பசி 14,
திருவள்ளுவர் ஆண்டு–2050.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

"வேளாண்மை' குறித்து 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

*****

1. 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள 56 பரிந்துரைகளில் 27 பரிந்துரைகள் துறையால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவை இணைப்பு 1–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

22 பரிந்துரைகள் மீது துறை எடுத்த நடவடிக்கைகளை குழு ஏற்றுக்கொண்டுள்ளது. குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பெற்ற பரிந்துரைகள் பற்றிய விவரங்கள் இணைப்பு 2–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

7 பரிந்துரைகள் மீது துறை மேலும் நடவடிக்கை தொடர வேண்டுமென குழு முடிவு செய்துள்ளது. துறையால் மேலும் நடவடிக்கை தொடரப்பட வேண்டிய இனங்கள் இணைப்பு 3–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

2. இணைப்பு 3–இல் கண்டுள்ள குழு தொடர விரும்பும் பரிந்துரைகள் மீது துறை உரிய நடவடிக்கை எடுத்து 2 மாத காலத்திற்குள் விவர அறிக்கை அனுப்பப்பட வேண்டுமென்று குழு விரும்புகிறது.

சென்னை – 600 009,
நாள்: 31.10.2019
விகாரி, ஐப்பசி 14,
திருவள்ளுவர் ஆண்டு–2050.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்புகள்

இணைப்பு – 1

துறையால் நிறைவேற்றப் பெற்றதாக கருதப்பெற்ற பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
1	1	7	வேளாண்மைத் துறையில் காலியாக உள்ள 520 வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் மற்றும் 1707 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் ஆகியவை வயது வரம்பு மற்றும் விகிதாச்சாரம் சம்பந்தப்பட்ட விதிகளை உரிய வகையில் தளர்த்தி, விரைவில் நிரப்பப்பட வேண்டும் என்றும் இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை ஒன்று குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1. வேளாண்மைத் துறையில் காலியாக உள்ள அனைத்து வேளாண்மை அலுவலர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு விட்டன.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.
2. காலியாக இருந்த 1707 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களில் 1595 பணியிடங்கள் 2009–ஆம் ஆண்டிலும், 112 பணியிடங்கள் 2010–ஆம் ஆண்டிலும் நிரப்பப்பட்டு விட்டன.	
(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது/–2/2007–62, நாள் 6.8.2019)	

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	2	10	இம்மாநிலத்தில் உள்ள 103 உழவர் சந்தைகளில் வேளாண்மை அலுவலர் மற்றும் துணை வேளாண்மை அலுவலர்கள் நியமிக்கப்படத் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள், அவற்றில் தற்போது நிரப்பப்பட்டுள்ளவை, காலியாக உள்ள இடங்கள் ஆகியவை குறித்த விவரங்களையும், 51 வேளாண்மை அலுவலர்கள் மற்றும் 52 துணை வேளாண்மை அலுவலர்கள் ஆகியோர் உழவர் சந்தைகளில் நியமனம் செய்யப்பட்டது குறித்து வெளியிடப்பட்ட ஆணையின் நகலினையும் குழுவிற்கு அளிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இம்மாநிலத்தில் உள்ள 103 உழவர் சந்தைகளில் 51 வேளாண்மை அலுவலர் மற்றும் 52 துணை வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் அரசாணை எண். 537, வேளாண்மைத் (வே.நி.8) துறை, நாள் 24.12.2007–ன் வாயிலாக தோற்றுவிக்கப்பட்டது. அவற்றில் தற்போது 51 வேளாண்மை அலுவலர்களுக்கும், 52 வேளாண்மை துணை அலுவலர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்கப்பட்டு பணியாற்றி வருகிறார்கள். (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	3	15	தருமபுரி விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு விதை சுத்திகரிப்பு இயந்திரம் விரைவில் கொள்முதல் செய்து வழங்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
2009–2010–ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு விதை சுத்திகரிப்பு இயந்திரம் ரூ.3.40 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	6	30	மேலே கூறிய 8 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களிலும் அட்டாமிக் அப்சார்ப்ஷன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் (Atomic Absorption Spectrophotometer) கருவி நிறுவப்பட்டு, அவை செயல்படத் துவங்கியது குறித்து அறிக்கை ஒன்றை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தேசிய மண்வள மேலாண்மைத் திட்டத்தின் கீழ், மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், பெரம்பலூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், கரூர், நாகப்பட்டினம், நாகர்கோவில், விருதுநகர், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு ஆகிய 13 மாவட்டங்களில் நவீன ஆய்வுக் கருவிகள் மற்றும் அட்டாமிக் அப்சார்ப்ஷன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் (Atomic Absorption Spectrophotometer) பொருத்தப்பட்டு நடமாடும் மண் பரிசோதனை வாகனங்கள் வழங்கப்பட்டன. அம்மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மண் பரிசோதனை இன்று வரை மேற்கொள்ளப்படுகிறது. இது தவிர, திருவள்ளூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, நாமக்கல், திருவாரூர், விழுப்புரம், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், அரியலூர் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகிற மண் பரிசோதனை நிலையங்களிலும் புதிதாக அட்டாமிக் அப்சார்ப்ஷன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் நிறுவப்பட்டு மண் மாதிரிகளில் உள்ள நுண்ணூட்டச்சத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டு தகுந்த உரப்பரிந்துரைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது/-2/2007-62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	8	38	அரசுப் பண்ணைகள் சீரிய முறையில் செயல்பட, அவற்றின் நீர் ஆதாரங்களைப் பெருக்கும் வகையில் 15 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான கருத்துருவிற்கு மத்திய அரசின் ஒப்புதலை விரைந்து பெற்று அக்கிணறுகள் அமைக்கப்பட துறை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			அரசுப் பண்ணைகளை சீரிய முறையில் செயல்படுத்திட அவற்றின் நீர் ஆதாரங்களை உயர்த்தும் வகையில் திட்டமிடப்பட்டு, 2008–2009 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 19 அரசு விதைப் பண்ணைகளில் ரூ.140.661 இலட்சம் நிதி செலவினத்தில் 54 புதிய ஆழ்குழாய் கிணறுகள் நிறுவப்பட்டன. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
6	17	71	கிருஷ்ணகிரி மாவட்டம், திம்மாபுரம் அரசு தோட்டக்கலைப் பண்ணைக்கு சுற்றுச்சுவர் மற்றும் உட்பகுதியில் பாதை அமைக்கவும் விற்பனை அங்காடி அமைக்கவும், உரிய மதிப்பீடுகளைப் பெற்று அப்பணிகள் விரைந்து முடிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்து ஓர் அறிக்கையைப் பெறவும் குழு விழைகிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			அரசு தோட்டக்கலை பண்ணை, திம்மாபுரத்தில் NABARD-RIDF XXII திட்ட நிதியின் மூலம் சுற்றுச்சுவர் மற்றும் கம்பிவேலி – 1190 மீட்டர் சுற்றளவுக்கு, ரூ.47.20 இலட்சம் செலவில் அமைக்கும் பணி முடிவுற்றன. ரூ.3.94 இலட்சம் செலவில் 20 சதுர மீட்டர் பரப்பளவில், விற்பனை அங்காடி அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	20	83	களப்பணியாளர்கள் மூலம் முன்கூட்டியே ஒவ்வொரு பகுதியினுடைய தேவையை கணக்கிட்டு, துறைக்கு தெரிவிப்பதன் மூலமும், மானியம் சமமாக அனைத்துப் பகுதி விவசாயிகளுக்கும் கிடைக்க ஏதுவாகும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			நிதி ஆண்டின் துவக்கத்தில் களப்பணியாளர்கள் மூலமாக ஒவ்வொரு பகுதியினுடைய தேவைகள் கணக்கிடப்பட்டு, அதன் அடிப்படையில் மானியத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
8	21	86	திருவண்ணாமலை மாவட்டத்தில் துறை மேற்கொண்ட முயற்சிகளினால் 2007–2008 ஆம் ஆண்டில், நெல்நடவுக் கருவி வாங்குவதற்கான விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்டு தற்போது மானியம் வழங்கப்பட்டுள்ளதா என்பது பற்றிய விவரங்களைக் குழுவிற்கு அளிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் 2007–2008 ஆம் ஆண்டு முதல் 2014–2015 ஆம் ஆண்டு வரை நெல்நடவுக் கருவிகள் 73 எண்கள் விவசாயிகள் வாங்குவதற்கு ரூ.86.29 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
9	22	89	தென்னை மரம் ஏறப் பயன்படும் கருவியினை விவசாயிகளுக்கு மானியத்தின் பேரில் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளதை உறுதி செய்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	தேசிய வேளாண் வளர்ச்சித் திட்ட வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் "வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கம்" வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தென்னை மரம் ஏறும் கருவியானது தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு கருவியின் அடிப்படை விலையில் 50 சதவிகித மானியத்திலும், மற்றும் இதர விவசாயிகளுக்கு கருவியின் அடிப்படை விலையில் 40 சதவிகித மானியத்திலும் அல்லது ரூ.8,000/– இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும் வேளாண்மைப் பொறியியல் துறையால் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது/–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
10	23	93	2007–2008 ஆம் ஆண்டில், பழைய பம்பு செட்டுகளுக்குப் பதிலாகப் புதிய பம்பு செட்டுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் எய்தக் கருதப்பெற்ற 16,615 பயனாளிகள் மற்றும் ரூ.10.00 கோடி மானியம் என்ற இலக்கு முழுமையாக எய்தப் பெற்றுள்ளதா என்பது குறித்து குழுவிற்குத் தெரிவிக்க வேண்டும் எனக் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	2007–2008 ஆம் ஆண்டில், பழைய பம்பு செட்டுகளுக்குப் பதிலாகப் புதிய பம்பு செட்டுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் எய்தக் கருதப்பெற்ற 16,615 பயனாளிகள் மற்றும் ரூ.10.00 கோடி மானியம் என்ற இலக்கிற்கு, 17341 பயனாளிகளுக்கு பழைய பம்பு செட்டுகளுக்கு பதிலாக புதிய பம்பு செட்டுகள் வாங்க ரூ.9.99 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது/–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
11	26	104	மேலும், உற்பத்தி தொடர்பாகவும், வியாபார ரீதியாகவும், அறுவடைப் பின்சார் தொழில் ரீதியாகவும் மற்றும் தொழில் ரீதியாகவும் பயிற்சிகள் அளிக்கப்படுவதற்கான கருத்துரு அனுப்பி ஒப்புதல் பெற்று பயிற்சிகள் விரைவில் துவக்கப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்

(5)

குழுவின் குறிப்புரை

(6)

உதகமண்டலம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் கீழ்க்காணும் பல்வேறு தோட்டக்கலைப் பயிற்சிகள் தொழில்முனைவோருக்கான பயிற்சிகள், அறுவடை பின்சார் தொழில் நுட்பங்கள், மதிப்புகூட்டுதல் குறித்த பயிற்சிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது:–

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வ.எண்	பயிற்சிகள்	பயனாளிகள்
1.	இயற்கை வேளாண்மை பற்றிய பயிற்சி	5843
2.	காய்கறி சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி	495
3.	அதிக மதிப்புக் கொண்டு கொய் மலர்கள் சாகுபடி பற்றிய பயிற்சி	568
4.	பூண்டு சாகுபடி பற்றிய பயிற்சி	256
5.	நறுமணப் பயிர்கள் மற்றும் மூலிகைப் பயிர்கள் சாகுபடி பற்றிய பயிற்சி	775
6.	நறுமணப் பயிர்களில் மதிப்புக்கூட்டுதல் பற்றிய பயிற்சி	420
7.	மொட்டுக் காளாண் வளர்ப்பு பற்றிய பயிற்சி	273
8.	உயிர் உரங்கள் மற்றும் மண்புழு உர உற்பத்தி பற்றிய பயிற்சி	251
9.	இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தின் விவசாயிகளுக்கான வானிலை பற்றிய பயிற்சி	250
10.	தொழில் முனைவோருக்கான பயிற்சி	195
11.	உயிர் உரங்கள் பற்றிய பயிற்சி	389
12.	உயிர் உரங்கள் உற்பத்தி பற்றிய தொழில் முனைவோருக்கான பயிற்சி	44
13.	அரசு சாரா அமைப்புகளின் பயிற்சி முகாம்	810
	மொத்தம்	10569

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்		
(1)	(2)	(3)	(4)		
12	28	113	தேசிய தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றின்கீழ் 18 மாவட்டங்களில் விதைப் பரிசோதனை நிலையங்கள் இந்த நிதி ஆண்டிலேயே (2008–2009) நிறுவப்படுவதற்கு துரித நடவடிக்கைகளை துறை மேற்கொள்ளவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
				தமிழகத்தில் விதைச்சான்று துறையின் கீழ் கோவை, ஈரோடு, உதகை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் ஆகிய 11 மாவட்டங்களில் விதை பரிசோதனை நிலையங்கள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. 2008–2009 ஆம் ஆண்டில், மீதமுள்ள 18 மாவட்டங்களில் (சென்னை, அரியலூர், திருப்பூர் நீங்கலாக) புதிய விதை பரிசோதனை நிலையங்கள் நிறுவுவதற்கு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பரிசீலனை செய்யப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டதின் பேரில், 2009–2010 ஆம் ஆண்டில் 18 புதிய விதை பரிசோதனை நிலையங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	
(1)	(2)	(3)	(4)	
13	33	137	50 இடங்களில் உழவர் சந்தை அமைக்கப்படுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது குறித்து குழு தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது. மேற்படி சந்தைகள் விரைவில் அமைக்கப்பட போன்ற அனைத்து தொடர் நடவடிக்கைகளையும் துறை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவேண்டும் என்றும் இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			அரசாணை (நிலை) எண் 360, வேளாண்மை (வே.வி.3) துறை, நாள் 07.09.2007–ன்படி, 2008–09–இல் 5 உழவர் சந்தைகளும், 2009–10–இல் 40 உழவர் சந்தைகளும் 2010–11–இல் 6 என மொத்தம் 51 உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர், 2011–இல் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 25 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு, ஏற்கெனவே அரசாணை(நிலை)எண்.488, வேளாண்மைத்(வேவி2)துறை, நாள் 12.11.1999–இன் படி துவங்கப்பட்ட 103 உழவர் சந்தைகளுடன் சேர்த்து தற்பொழுது தமிழகத்தில் 179 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
14	34	138	சீர்காழியில் அமைக்கப்படவுள்ள உழவர் சந்தைக்கு இடம் தெரிவு செய்யப்பட்டுவிட்ட நிலையில், அங்கு விரைவில் உழவர் சந்தை அமைக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
		சீர்காழியில் புதிய உழவர் சந்தை, சீர்காழி நகரம் வார்டு "A" பிளாக் 56–ல் உள்ள நகர் புல எண் 65–ல் (கால்நடை மருத்துவமனைக்கு வடபுறம் உள்ள 15 சென்ட் இடம்) 15.02.2009 முதல் செயல்பட்டு வருகிறது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
15	35	146	மேற்படி வணிக வளாகங்கள் கூடிய சீக்கிரம் அமைக்கப்பட விரைவான நடவடிக்கைகளை துறை மேற்கொள்ள வேண்டும் என்றும் இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
மேற்படி வணிக வளாகங்கள் அமைக்கும் திட்டங்களில் பங்கேற்க விருப்பம் உள்ள தனி நபர் / கூட்டமைப்பு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் (Application and bid proposals) பெற நாளிதழ்களில் 11.11.2006, 11.01.2007, 08.10.2008 மற்றும் 26.05.2008 ஆகிய தேதிகளில் விருப்பக் கோரிக்கை விளம்பரம் (Expression of Interest) வெளியிடப்பட்டது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து விருப்பக் கோரிக்கைகள் வராத காரணத்தினால், அந்த விருப்பக் கோரிக்கை கைவிடப்பட்டு, மாற்றாக தமிழ்நாட்டில் 5 இடங்களில் குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மூலமாக அமைப்பதற்கு அரசாணை பெறப்பட்டுள்ளது.

1. தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் தக்காளிக்கென ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் அரசாணை எண் 196, வேளாண்மை (வே.வி3) துறை, நாள் 30.09.2009–இன்படி அமைக்கப்பட்டு தற்போது விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளது.

2. கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கென ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் அமைக்க அரசாணை எண் 195, வேளாண்மை (வே.வி3) துறை, நாள்.30.09.2009–இன்படி அமைக்கப்பட்டு தற்போது விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளது.

3. கோயம்புத்தூர் மாவட்டம், பொங்கலூரில் வெங்காயத்திற்கென ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் அமைக்க அரசாணை எண்.194, வேளாண்மை (வே.வி.3) துறை, நாள் 30.09.09–இன்படி அமைக்கப்பட்டு தற்போது விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளது.

4. தேனி மாவட்டம், ஒடைப்பட்டில் திராட்சைக்கென ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் அமைக்க அரசாணை எண் 287, வேளாண்மை (வே.வி3) துறை, நாள் 9.1.2009–இன்படி அமைக்கப்பட்டு தற்போது விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளது.

5. தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் தேங்காய்க்கென ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் அமைக்க அரசாணை எண் 197, வேளாண்மை (வே.வி.3) துறை, நாள் 30.9.2009–இன்படி அமைக்கப்பட்டு தற்போது விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளது.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது/–2/2007–62, நாள் 6.8.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
16	36	149	இராயக்கோட்டையில் தக்காளி விளைச்சல் அதிகம் என்பதால், அரசு திட்டமிட்டுள்ள தக்காளிக்கான வணிக வளாகத்தை ஒசூருக்குப் பதிலாக இராயக்கோட்டையில் அமைக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
இராயக்கோட்டையில் இருந்து 25கி.மீ தொலைவில் உள்ள பாலக்கோட்டில், பாலக்கோடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து அனைத்து விவசாயிகள் பயனடையும் வகையில் தக்காளிக்கென குளிர்பதன கிடங்குடன் கூடிய நவீன வணிக வளாகம் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மூலம் அமைக்கப்பட்டு தற்போது விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளது. (அரசாணை எண் 196 வேளாண்மை (வே.வி3) துறை, நாள் 30.9.2009). மேலும், தற்போது இராயக்கோட்டையில் விரிவாக்கத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள முதன்மை பதப்படுத்தும் மையத்தில் 110 மெட்டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது/–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
17	39	162	கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கு ஏற்றுமதி மண்டலம் அமைக்கும் பணி விரைவில் முடிக்கப்பெற வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள முந்திரி விவசாயிகள் பயனடையும் வகையில், இம்மண்டலத்தில் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட தனியார் நிறுவனமான சத்துவா ஏற்றுமதி நிறுவனம் (M/S Sattuva Agro Export Ltd.,) தெரிவு செய்யப்பட்டுள்ளது. கடலூரில் நவீன நாற்றங்கால் அமைக்க 3.0 ஏக்கர் நிலமும் மற்றும் நவீன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த 2.5 ஏக்கர் நிலமும் அந்நிறுவனத்தால் வாங்கப்பட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் ஏற்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தினை செயல்படுத்த டிட்கோ நிறுவனத்துடன் கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது. இந்தத் திட்டப்பணிக்கு, மத்திய அரசின் வணிக அமைச்சகம் ASIDE (Assistance for Development of Export Infrastructure and Allied Activities) என்ற திட்டத்தின் கீழ் ரூ.4.00 கோடி நிதி அனுமதித்து, இந்நிதி டிட்கோ நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில், டிட்கோ நிறுவனம் ரூ.2.00 கோடி தொகையினை சத்துவா நிறுவனத்திற்கு விடுவித்துள்ளது. இந்நிறுவனம் முந்திரி ஏற்றுமதி செய்து வருகின்றது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்		
(1)	(2)	(3)	(4)		
18	42	179	தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் அனைத்து விவரங்களையும், அதாவது ஒவ்வொரு நிறுவனமும் அளித்துள்ள விலைப்புள்ளிகள், துறை பரிந்துரை செய்யும் செடிகளுக்கு இடையே இருக்க வேண்டிய இடைவெளி, மானியம் போன்ற அனைத்து விவரங்களையும் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்துவதற்கான முயற்சிகளை துறை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது		
			துறையின் பதில்		குழுவின் குறிப்புரை
			(5)		(6)
			நுண்ணீர்ப் பாசனம் அமைப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட நுண்ணீர் பாசன நிறுவனங்கள் பற்றிய விவரங்களையும், விலைப்புள்ளி விவரங்களையும், பயிர்களுக்கு இடையே இருக்க வேண்டிய இடைவெளி, மானியம் போன்ற அனைத்து விவரங்களையும், விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வண்ணம் நுண்ணீர் பாசனம் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் கிராம வாரியாக நடத்தப்பட்டு, வருகின்றன.		நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.
			(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது/I–2/2007–62, நாள் 6.8.2019)		

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	
(1)	(2)	(3)	(4)	
19	44	183	மறுசீரமைப்பு மூலம் துறைகளில் போதுமான பணியாளர்கள் வழங்கப்பட்டுள்ளதால், செயல்படுத்தப்பட்டு 2008 – 2009 ஆம் ஆண்டில் திட்டமிட்டவாறு நுண்ணீர் பாசனத் (38000 எக்டேர் நிலப்பரப்பு; ரூ.90 கோடி நிதி ஒதுக்கீடு) முழு அளவில் எய்தப்பட வேண்டும் என்று	இத்திட்டம் தீவிரமாக திட்டத்திற்கான இலக்கு குழு பரிந்துரை செய்கிறது.
			துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(5)	(6)
			2006–2007 ஆம் ஆண்டு நுண்ணீர் பாசனத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, 2007–2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகளின் நலன் கருதி, தமிழக அரசு, சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மற்றும் வறட்சிக்கு இலக்காகாத பகுதி என்ற பாகுபாடின்றி வழங்கி வருகிறது. எனவே, விவசாயிகளின் மத்தியில் இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.
			(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது/I–2/2007–62, நாள் 6.8.2019)	

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்		
			(4)		
20	47	190	இது குறித்து அரசுச் செயலாளர், குழுவிடம் உறுதியளித்தவாறு, உயர்மட்ட அளவில், அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வினை மேற்கொண்டு, குழுவிற்கு விரிவான அறிக்கை ஒன்றினை அளிக்க வேண்டும் என்று குழு மேலும் பரிந்துரை செய்கிறது.		
			துறையின் பதில்		குழுவின் குறிப்புரை
			(5)		(6)
			அனைத்து மாவட்டங்களில் உள்ள விவசாயிகளிடமிருந்து ஆலோசனை பெறப்பட்டு, இத்திட்டத்தை செயல்படுத்தும் அனைத்து துறைகளிலும் உள்ள மாநில அளவிலான மற்றும் மாவட்ட அளவிலான அதிகாரிகளுடனும் ஆலோசனை செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், கரும்பு பயிருக்கு நுண்ணீர்ப் பாசன திட்டம் செயல்படுத்துவதில் உள்ள தவறுகள் களையப்பட்டு தற்பொழுது, தோட்டக்கலைப் பயிர்களுக்கு பின்பற்றப்படும் நடைமுறைகளே கரும்பு பயிருக்கும் பின்பற்றப்படுகிறது. தொடர்ந்து இத்திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதும் தோட்டக்கலை பயிர்களுக்கும் கரும்பு போன்ற வேளாண் பயிர்களுக்கும் ஒரே மாதிரியான வழிமுறைகளின்படி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)		நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.
வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்		
			(4)		
21	48	193	கரும்பு சாகுபடியில் அதிக மகசூல் பெற கரும்பு நடவு செய்யும்போது எந்த முறையினைப் பின்பற்றலாம் (குழி முறை நடவு, இரட்டைப் பாத்தி நடவு) என்பது குறித்தும் நடவில் இடைவெளி எவ்வளவு இருக்க வேண்டும் என்பது குறித்தும், வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பரிந்துரையின் அடிப்படையில், தெளிவான அறிவுரைகள் அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் வழங்கப் பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.		

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கரும்பு சாகுபடியில் அதிக மகசூல் பெற்று கரும்பு விவசாயிகளின் வருவாயை பெருக்கும் நோக்குடன் நீடித்த நிலையான கரும்பு சாகுபடித்திட்டம் (Sustainable Sugarcane Initiative) அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட கோட்பாடுகள் கரும்பு சாகுபடியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

- அகலப்பார் நடவுமுறை (குறைந்தது 4 அடி இடைவெளிக்கு மேல்)
- சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் சொட்டு நீர் மூலம் உரமிடல்
- பருசீவல் நாற்றுக்கள் நடவு
- கூடுதல் வருவாய் பெற ஊடுபயிர் சாகுபடி
- வயல் தயாரிப்பு முதல் அறுவடை வரை இயந்திரங்களை பயன்படுத்துதல்

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்குட்பட்ட பகுதிகளில் நவீன சாகுபடி முறைகளை உள்ளடக்கிய மாதிரி வயல்கள் அமைக்கப்பட்டு கரும்பு விவசாயிகள் உயர் விளைச்சல் பெறுவதற்கான வழிமுறைகள் செயல் விளக்கங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் ஆத்மா (ATMA) திட்டத்தின் கீழ் வேளாண்மைத் துறையுடன் இணைந்து கரும்பு விவசாயிகளை அண்டை மாநிலங்களுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள விவசாயிகளின் சிறந்த சாகுபடி முறைகள் மற்றும் அனுபவங்களை அறிந்து செயல்படுத்திட ஏதுவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இது தவிர தரமான வல்லுநர் விதைக்கரும்பு, புதிய கரும்பு ரகங்களின் விதைக்கரும்பு, திசு வளர்ப்பு நாற்றுகள், பரு சீவல் நாற்றுக்கள், தோகையை தூளாக்கி மண்ணின் வளத்தை அதிகரித்தல் போன்ற திட்டங்களும், அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (NADP) அரசு மானியத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1-2/2007-62, நாள் 6.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்		
(1)	(2)	(3)	(4)		
22	49	196	கரும்பு அறுவடை செய்வதில் விவசாயிகள் எதிர் கொள்ளும் இடர்பாடுகளை களையும் வகையில், கரும்பு வெட்டும் கருவியினை விரைவில் விவசாயிகளின் மத்தியில் அறிமுகம் செய்யவும், அதன் செயல்பாட்டின் திறமை அடிப்படையில் கரும்பு விவசாயிகளுக்கு மானியத்தின் பேரிலோ, வாடகைக்கோ வழங்கப்படுவதற்கும் துறை தூரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.		
			துறையின் பதில்		குழுவின் குறிப்புரை
			(5)		(6)
			கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் அரைவைத் திறன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் 2018–2019 நிதியாண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் 40% மானியத்தில் 8 கரும்பு அறுவடை இயந்திரங்கள் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்போது கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் சொந்த நிதியில் கொள்முதல் செய்யப்பட்ட அறுவடை இயந்திரங்களையும் சேர்த்து மொத்தமாக 20 கரும்பு அறுவடை இயந்திரங்கள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இதுதவிர, தனியார் சர்க்கரை ஆலைகளிலும் சுமார் 30 கரும்பு அறுவடை இயந்திரங்கள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. 2018–2019 பருவத்தில் சுமார் 5% அளவிற்கு கரும்பு அறுவடை இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்யப்பட்டுள்ளது. கரும்பு இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு இருப்பதன் காரணமாக 2019–2020–ஆம் நிதியாண்டில் மேலும் 10 அறுவடை இயந்திரங்கள் 40 சதவிகித மானியத்தில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிர்வரும் பருவங்களில் அறுவடை இயந்திரம் மூலம் அறுவடை செய்யப்படும் கரும்பின் அளவு கணிசமாக அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)		நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
23	52	205	சொட்டுநீர்ப் பாசன முறையில் நீரில் கரையும் திரவ உரங்கள் பயன்படுத்துவது மிகுந்த பயன் அளிக்கும் முறை என்பதால், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலனைக் கருதி, திரவ உரங்கள் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதற்கான கருத்துருவினை வலியுறுத்தி, மத்திய அரசின் ஒப்புதலைப் பெற, துறை அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

சொட்டு நீர்ப்பாசன முறையில் நீரில் கரையும் உரங்களின் பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு திட்டங்களின் கீழ் இவ்வினத்தை செயல்படுத்த 2007–2008 ஆம் ஆண்டு முதல் உரிய கருத்துரு அனுப்பப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலின்பேரில் துல்லிய பண்ணையம் மற்றும் நிதித்த நவீன கரும்பு சாகுபடி திட்டங்களின்கீழ் சிறு குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் நீரில் கரையும் உரங்கள் முழு மானியத்துடன் விலையில்லா இடுபொருளாக வழங்கப்பட்டது. 2007–2008 முதல் 2014–2015 வரை, வேளாண் துறையின் மூலம் வேளாண் பயிர்களுக்கு வழங்கப்பட்ட நீரில் கரையும் உரங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:–

வருடம்	நீரில் கரையும் உரங்கள் விநியோகம் (மெ.டன்)	பயனடைந்த சிறு குறு விவசாயிகளின் எண்ணிக்கை
2007–2008	1594	1212
2008–2009	1126	856
2009–2010	1052	800
2010–2011	947	720
2011–2012	1783	1356
2012–2013	1290	981
2013–2014	1908	1420
2014–2015	869	640
மொத்தம்	10569	7985

ஆண்டுதோறும் சிறு குறு விவசாயிகள் பயனடையும் வகையில் சொட்டு நீர்ப்பாசன முறையில் நீரில் கரையும் உரங்கள் வழங்கப்பட்டு பரிந்துரை நிறைவேற்றப்பட்டது.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)

குழுவின் குறிப்புரை
(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
24	53	206	உரக் கலப்படத்தை விவசாயிகளே கலபமாகக் கண்டறியும் எளிய முறைகளை விவசாயிகளுக்கு விளம்பரங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக தெரிவிக்க உரிய நடவடிக்கையை துறை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
விவசாயப் பயன்பாட்டிற்காக தேவைப்படும் இரசாயன உரங்கள் மாநில அரசால் கணக்கிடப்பட்டு, மாதந்தோறும் மத்திய அரசிடமிருந்து உர உற்பத்தியாளர்கள் மற்றும் உர இறக்குமதியாளர்கள் வாயிலாகப் பெறப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள 4431 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 7367 தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலமாக மாவட்டங்களில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. விவசாயிகளால் வாங்கப்படும் உரங்கள் தரமானவை என்பதை உறுதி செய்யவும் கலப்படம் அற்றவையாக உள்ளனவா என்பதை விவசாயிகளே தெரிந்து கொள்ளவும் 2007–2008 ஆம் ஆண்டில் 1626 உழவர் வயல்வெளி பள்ளிகள் மூலமாக 48,780 விவசாயிகளுக்கும் 2008–2009 ஆம் ஆண்டில் 2006 உழவர் வயல்வெளி பள்ளிகள் மூலமாக 60,180 விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டில் 31 மாவட்டங்களிலும் மாவட்ட அளவில் உர உற்பத்தி/இறக்குமதி நிறுவனங்களின் பிரதிநிதிகள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் உர ஆய்வக வல்லுநர்களைக் கொண்டு "உர மேளா" (Fertilizer Mela) நடத்தப்பட்டது. இதில் விவசாயிகளுக்கு உரங்களின் தரம் மற்றும் உரங்களில் உள்ள கலப்படத்தை சுலபமாகக் கண்டறிய உதவும் வழிமுறைகள் குறித்த பயிற்சியும் துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டது. மேலும், மாவட்டங்கள் தோறும் பயிர் பருவ காலங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக உரக்கலப்படம் கண்டறிவது தொடர்பாக விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
25	54	209(i)	வேளாண்மைப் பணிகளில், மண், நீர் ஆகியவற்றின் ஆய்வுகள் மற்றும் பயன்கள் குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்த வேண்டும்.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
வேளாண்மைப் பணிகளில், மண், நீர் ஆகியவற்றின் ஆய்வுகள் மற்றும் பயன்கள் குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்த அனைத்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களுக்கும் உரிய அறிவுரை வழங்கப்பட்டு தொண்டு நிறுவனங்கள் வேளாண் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது/-2/2007-62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
26	55	209(ii)	விவசாயக் கருவிகள் வாங்க மானியம் வழங்குதல் போன்ற மானியத் திட்டங்கள் குறித்து விவசாயிகள் அறிந்து கொள்ள விவசாய கருத்தரங்குகள், மின் வாரியத்தில் மின் கட்டணம் கட்ட வரும் இடங்களில் விளம்பரங்கள், துண்டு பிரசுரங்கள் மற்றும் மீடியாக்களில் போதிய விளம்பரங்கள் ஆகியவைகள் செய்யப்பட வேண்டும்.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			விவசாயக் கருவிகள் மானிய விலையில் வழங்குதல் உள்ளிட்ட மானிய திட்டங்கள் குறித்து விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் உழவர் பெருவிழா மூலமாக 16,329 வருவாய் கிராமங்களில் 15,845 கருத்துக்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன் மூலமாக விவசாயிகள் மானிய திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டனர். இது தவிர, பிரதான இடங்களில் 506 விளம்பர பலகைகள் வாயிலாகவும், 1,006 வகையான துண்டு பிரசுரங்கள் மூலமாகவும், 936 சுவர் விளம்பரங்கள் மூலமாகவும் மாவட்டம் மற்றும் வட்டார அளவில் விளம்பர பணிகள் வேளாண் துறையின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
27	56	209(ii)	மத்திய மாநில அரசு அறிவிக்கும் பல்வேறு மானியத் திட்டங்கள் குறித்து பரவலாக விளம்பரம் செய்யப்பட வேண்டும்.

		துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
		மத்திய / மாநில அரசு அறிவிக்கும் பல்வேறு மானியத் திட்டங்கள் குறித்து 2013–2014 ஆம் ஆண்டில், 5,529 செய்தித்தாள் விளம்பரங்கள், 154 தொலைக்காட்சி விளம்பரங்கள் 1,268 வானொலி விளம்பரங்கள் மூலமாகவும், 820 எண்கள் தொழில்நுட்பம் மற்றும் மானிய திட்டங்கள் குறித்த புத்தக வெளியீடுகள் மூலமாகவும் விவசாயிகள் அறிந்திடும் வகையில் விளம்பர பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இது தவிர, விவசாயிகள் தங்களுடைய கைபேசியில் அனைத்து மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டு வருகின்றன. குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இணைப்பு – 2

பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றதாக கருதப்பெற்றவை

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	5	27	மேலே கூறியுள்ளவாறு 11 மாவட்டங்களில் மண் பரிசோதனை நிலையங்களும் 6 மாவட்டங்களில் பூச்சி மருந்து ஆய்வகங்களும் முழுமையாக நிறுவப்பட்டு செயல்படத் துவங்கியுள்ளது குறித்து குழுவிற்கு விரைவில் அறிக்கை ஒன்று அளிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் 2009–2010 ஆம் ஆண்டில், 11 மாவட்டங்களான திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர், கிருஷ்ணகிரி, கரூர், நாமக்கல், விருதுநகர் மற்றும் அரியலூரில் மண் பரிசோதனை நிலையங்கள் நிறுவப்பட்டன. அவ்வாண்டு 2,90,345 மண் மாதிரிகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு உரப்பரிந்துரைகள் வழங்கப்பட்டன. இந்த மண் பரிசோதனை நிலையங்களுக்கு 2015–2016 ஆம் ஆண்டில், 2,90,400 எண்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மண் மாதிரி ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இத்திட்டத்தின் கீழ் 2009–2010 ஆம் ஆண்டில் பூச்சி மருந்து ஆய்வகங்கள் வேலூர், நாகப்பட்டினம், தர்மபுரி, தேனி, சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்டன. 2009–2010 ஆம் ஆண்டில், இவ்வாய்வகங்களுக்கு 7150 எண்கள் மாதிரிகள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 2015–2016 ஆம் ஆண்டில், 7171 எண்கள் மாதிரிகள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.
2	7	34	விவசாயிகளுக்கு தரமான இடுபொருட்கள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யும் ஒரு நடவடிக்கையாக, திட்டமிட்டவாறு உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் இல்லாத 16 மாவட்டங்களிலும் ஆய்வகங்கள் அமைக்கப்படுவதற்கான கருத்துரு குறித்து மத்திய அரசிடம் வலியுறுத்தி நிதியுதவியினைப் பெற்று உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் விரைவில் அமைக்கப்பட துறை தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.		

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் இல்லாத 16 மாவட்டங்களில் புதிய உரக்கட்டுப்பாடு ஆய்வகங்கள் அமைக்க மத்திய அரசின் நிதியுதவி பெறும் பொருட்டு கருத்துரு அனுப்பப்பட்டது. இந்திய அளவில் பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் வருடாந்திர பகுப்பாய்வு திறன் அதிகமாகக் கொண்ட உரக்கட்டுப்பாடு ஆய்வகங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. எனவே, புதிதாக மேலும் 16 புதிய உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் அமைக்க மத்திய அரசு நிதி ஒப்பளிப்பு வழங்கவில்லை. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	9	43	குழுக் காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள சிக்கல்களை கருத்தில் கொண்டு, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் தனிநபர் காப்பீட்டுத் திட்டத்தினை அமல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளைத் துறை ஆராய்ந்து, தகுந்த நிபந்தனைகளுடன் அமல்படுத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	தனி விவசாயி பயிர் காப்பீட்டுத் திட்டத்தை முன்னோடி திட்டமாக செயல்படுத்த மத்திய அரசின் ஒப்புதலுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் பரிந்துரைகள் வழங்க தேசிய பயிர் காப்பீட்டு நிறுவனத்தை மத்திய அரசு கோரியதை தொடர்ந்து இந்நிறுவனத்தின் அதிகாரிகளை கொண்ட குழு 18.2.2015 மற்றும் 19.2.2015 தமிழகத்திற்கு வந்து ஆய்வு மேற்கொண்டது. இத்திட்டம் செயல்படுத்துவதற்கான திருத்திய கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இது அரசின் கொள்கை முடிவாகும். (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
4	11	49	இனிவரும் காலங்களில், பயிர் உற்பத்தி இலக்கினை நிர்ணயம் செய்கையில் துறையின் களப்பணியாளர்கள் விவசாயிகளுடன் தொடர்பு கொண்டு அவர்கள் நடவு செய்யவுள்ள பயிர் குறித்து ஒரு அறிக்கையினைத் துறைக்கு அளிக்க வேண்டும் என்றும் அவ்வறிக்கைகளின் அடிப்படையில் உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	பெருகிவரும் மக்கட்தொகைக்கு ஏற்ப உணவுத் தேவையும் அதிகரித்து வரும் நிலையில், ஒவ்வொரு ஐந்தாண்டு காலத் திட்டத்திற்கு பயிர் சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. மேலும், மழையளவு, பாசன வசதி, மண் வகை, இயல்பான பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன், பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் மூலம் கணக்கிடப்படும் முந்தைய வருட பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனின் அடிப்படையில், விவசாயிகளின் பங்கேற்புடன் களப்பணியாளர்கள் அவ்வட்டாரத்தின் திறனுக்கேற்ப வகுக்கும் பயிர்சாகுபடித் திட்டத்தை, வேளாண்மை இணை இயக்குநர்கள் தொகுத்து மாவட்ட அளவிலான பயிர் சாகுபடித் திட்டத்தை வகுக்கிறார்கள். இதன் அடிப்படையிலேயே மாநில அளவிலான பயிர் சாகுபடித் திட்டமும், உற்பத்தி இலக்கும் இறுதி செய்யப்படுகிறது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.
வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)		
5	12	52	ஈரோடு மாவட்டம் கோபி செட்டிப்பாளையத்தில் உள்ள தென்னை மற்றும் கரும்பு ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை (குளிர்சாதன வசதி உட்பட) உடனடியாக துறை மேற்கொள்ள வேண்டுமென்றும் இது குறித்து குழுவிற்கு அறிக்கை ஒன்று அளிக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.		

துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

கரும்பு மற்றும் தென்னை ஒட்டுண்ணி மையங்களுக்கு தேவைப்பட்ட குளிர்சாதனப் பெட்டியானது சேலம் மாவட்டம் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்திலிருந்து மாறுதலில் எடுத்து வரப்பட்டு ஒட்டுண்ணி உற்பத்திப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், இரும்பு ரேக்குகள் 20 எண்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள IPMமையத்தில் இருந்து மாறுதலில் பெற்றுக் கொள்ள ஆணை வழங்கப்பட்டு, கோபிசெட்டிபாளையம் கரும்பு ஒட்டுண்ணி ஆய்வகத்தால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆத்மா திட்டத்தின் வாயிலாக சிறப்பு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு (கரும்பு ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையத்திற்கு ரூ.1,13,600 மற்றும் தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையத்திற்கு ரூ.80,100 மொத்தம் ரூ.1,93,700/–) கரும்பு மற்றும் தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்களுக்கு குளிர்சாதன வசதி ஏற்படுத்தப்பட்டு, உழவர்களின் தேவைக்கேற்ப கோடை காலத்திலும், ஒட்டுண்ணிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தென்னை மற்றும் கரும்பு ஒட்டுண்ணி மையத்திற்கு தேவையான நடைமுறை மூலதன செலவினங்களுக்கு போதுமான நிதி ஒதுக்கீடுகள் ஆண்டுதோறும் செய்யப்பட்டு எவ்வித தடையுமின்றி ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டதால் கோபிசெட்டிப்பாளையம் கரும்பு மற்றும் தென்னை ஒட்டுண்ணி மையங்களின் உற்பத்தி திறனை நிலையாக ஒரே சீரான நிலையில் கொண்டு செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் கரும்பு ஒட்டுண்ணி மையத்தில் சுமார் 700–800 எக்டேர் பரப்பிற்கான டிரைக்கோகிராமா ஒட்டுண்ணி உற்பத்தி செய்யப்படுகிறது. தென்னை ஒட்டுண்ணி உற்பத்தி மையத்தில் ஆண்டு ஒன்றுக்கு 800–1000 எக்டேர் பரப்பிற்கான பிரக்கோனிட் ஒட்டுண்ணி உற்பத்தி செய்யப்பட்டு தென்னை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கடந்த ஆண்டுகளில் கோபிசெட்டிப்பாளையத்தில் அமைந்துள்ள (நஞ்சகவுண்டன் பாளையம்) கரும்பு மற்றும் தென்னை (அரசு மருத்துவமனை அருகில்) ஒட்டுண்ணி நிலையங்களின் உற்பத்தியை அதிகரிக்க வெவ்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக கரும்பு ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையத்தில் 580 எக்டர் அளவிற்கு ஒட்டுண்ணி உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 2017–2018 ஆம் ஆண்டு 880 எக்டர் பரப்பிற்கு கரும்பு ஒட்டுண்ணி உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு கரும்பில் இடைக்கணுப்புழு தாக்குதல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு உள்ளது.

கரும்பு ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையத்தை போலவே தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையத்திலும் 2017–2018 ஆம் ஆண்டு கடந்த ஆண்டுகளில் உற்பத்தி செய்த அளவை விட அதிக அளவாக 1430 எக்டர் பரப்பளவிற்கு பிரக்கோனிட் ஒட்டுண்ணி உற்பத்தி செய்து திருப்பூர் மற்றும் ஈரோடு

மாவட்ட விவசாய பெருமக்களுக்கு வழங்கப்பட்டு, தென்னையில் கருந்தலைப்புழு தாக்குதல் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டு உள்ளது.

மேற்கண்ட இரண்டு மையங்களும், தமிழகத்தில் தொடர்ச்சியாக 45 ஆண்டுகளுக்கும் அதிகமாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், இந்த மையங்கள் மூலம் உழவர்கள் மிகவும் பயன்பெற்று வருகிறார்கள்.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
6	13	58	திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான அரசு ஆணை 13.02.2008 அன்று வெளியிடப்பட்டிருக்கையில் நிதியாண்டு முடிவடைய கிட்டத்தட்ட 45 நாட்கள் இருக்கையில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2007–2008 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 41.00 லட்சத் தொகையினை துறை எவ்வாறு செலவிட முடியும் என்பது குழுவிற்கு ஐயப்பாட்டினை அளிக்கிறது. எனவே 2007–2008 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி செலவிடப்பட்டது பற்றிய விவரங்களை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தினை 2007–2008 ஆம் ஆண்டில் செயல்படுத்த அரசாணை எண். 35 வேளாண்மை (தோக2) துறை, நாள் 13.02.2008–ன்படி இத்திட்டத்திற்கு ரூ.41.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த அரசாணை பெறப்பட்டதும், திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு தேவையான பயனாளிகள் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்ட நிலையில் திட்டத்திற்கான இடுபொருட்கள் இவ்வியக்ககக் கட்டுப்பாட்டிலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் முன்னரே உற்பத்தி செய்து தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாலும், டான்ஹோப் மூலம் முன்னரே எல்லா இடுபொருள்களுக்கும் விலை அங்கீகாரம் செய்யப்பட்டிருந்ததாலும், உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. எனவே 2007–2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூ.41.00 இலட்சம் முழுமையாக செலவிடப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	
(1)	(2)	(3)	(4)	
7	14	62	எனவே, அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் விவசாயிகளின் தேவைக்கேற்ப மரக்கன்றுகள் மற்றும் செடிகள் ரகத்தினை உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் அவற்றை குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது	
			துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(5)	(6)
			அரசு தோட்டக்கலை பண்ணைகளில் ஆண்டுக்கு சுமார் ரூபாய் 15.00–கோடியிலிருந்து 20.00 கோடி வரை தோட்டக்கலை நடவுப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு நேரடியாக பல்வேறு திட்டங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன. இவைகளின் விலை, செடிகளின் உற்பத்தி செலவினத்தை மட்டும் கருத்தில் கொண்டு, குறைந்த விலையில் நிர்ணயம் செய்யப்படுகின்றன. ஒர் இனத்தில் உள்ள எல்லா ரகங்களுக்கும் ஒரே விலையே நிர்ணயித்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. உதாரணத்திற்கு மா–வில் சாதாரண ரகங்களான நீலம், பெங்கூளுரா, செந்தூரா ஆகியவற்றின் விலையிலேயே, உயர் ரகங்களான இமாம் பசந்த், பங்கனபள்ளி, மல்கோவா மற்றும் அல்போன்சா ஆகிய ரகங்களும் விற்பனை செய்யப்படுகிறது. எனவே, அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் குறைந்த விலையிலேயே நடவுச் செடிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.
வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	
(1)	(2)	(3)	(4)	
8	15	63	மேலும், சேலம் மாவட்டம், ஏற்காடு அரசு தோட்டக்கலைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் ரோஜா செடிகளை ஒரு செடிக்கு ரூ.5 என்று விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்யப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	
			துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(5)	(6)
			சேலம் மாவட்டம் ஏற்காடு அரசுத் தோட்டக்கலைப் பண்ணையில் ரோஜா செடிகள் உற்பத்தி செய்ய 100 செடிகளுக்கான உற்பத்தி செலவு ரூ. 810/– ஆகும். ஆகவே, ஒரு செடி உற்பத்திக்கான செலவு ரூ.8.10/– மற்றும் அதன் பராமரிப்பு செலவுகளான நீர்ப்பாய்ச்சுதல், உரமிடுதல் மற்றும் பயிர்பாதுகாப்பு ஆகியவற்றையும் கணக்கிட்டு குறைந்த விலையில் ரூ.10/– என விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்யப்படுகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

இந்நிலையில் ஏற்காடு அரசு தோட்டக்கலைப் பண்ணையில் அனைத்து இடுபொருட்கள் விலைகளும் அதிகரித்துள்ள நிலையிலும், ரோஜா செடி ரூ. 10/–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதைவிட குறைந்த விலைக்கு விற்பனை செய்தால் அரசுக்கு இழப்பு ஏற்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
9	16	68	புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை அரசு தோட்டக்கலைப் பண்ணையை முழுவதுமாக பயன்படுத்தி மரம் செடிகளை பயிர் செய்து ஆண்டு வருமானத்தை உயர்த்த துறை எடுக்கக் கருதியுள்ளதாகத் தெரிவித்துள்ளப் பணிகளை செய்து முடித்தது பற்றிய அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.	உயர்மட்ட குழுவின் பரிந்துரையின்படி பண்ணையின் E–பிளாக் பகுதியில் உள்ள புதர்கள் அழிக்கப்பட்டு, 133.79 எக்டரில் மா, சப்போட்டா, நெல்லி, எலுமிச்சை மற்றும் மூங்கில் போன்ற செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன. மா, சப்போட்டா, கொய்யா, நெல்லி, எலுமிச்சை மற்றும் மூங்கில் போன்ற நடவுச்செடிகள் அடர் நடவு முறையில் 23.825 எக்டர் நிலப்பரப்பில் நடவு செய்யப்பட்டு சுமார் 7.72 இலட்சம் எண்கள் நடவுப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பு சுமார் 50 இலட்சமாகும். மேலும், கத்தரி, தக்காளி, முருங்கை மற்றும் கொத்தவரை போன்ற காய்கறிகளின் விதை உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	18	79	பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க மானியம் அளிக்கப்படுவதற்கான இறுதி தவணைத் தொகை ரூ.404.955 இலட்சம் தற்போது மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பது குறித்தும், அவ்வாறு பெறப்பட்டிருந்தால் அந்த நிதி முழுவதும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் வகையில் செலவிடப்பட்டுள்ளதா என்பது குறித்தும் குழுவிற்குத் தெரிவிக்க வேண்டுமெனக் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் வகையில் மத்திய அரசிடம் இருந்து இறுதி தவணைத் தொகையாக ரூ.404.955 இலட்சம் பெறப்பட்டது. இறுதி தவணைத் தொகையும் சேர்த்து 2007–2008–ஆம் ஆண்டில் ரூ.899.90 இலட்சம் பெறப்பட்டு, வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.898.944 இலட்சம், மானியம் வழங்கப்பட்டது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம் (4)
(1)	(2)	(3)	
11	19	82	குழு, மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, பல பகுதிகளில் மானியம் கிடைக்கவில்லை என்பதைக் குறையாகச் சொல்லப்பட்டது. எனவே, வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகள் வாங்குவதற்கென ஒதுக்கப்படும் மானியத்திற்கான நிதியினை ஒன்றியம் அல்லது மண்டலம் வாரியாகப் பிரித்து சமமாக வழங்க வேண்டும் என்றும், தேவையில்லை என்று தெரியும் இடங்களிலிருந்து தேவையுள்ள பகுதிகளுக்கு பின்னர் மாற்றிக் கொடுக்கலாம் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
		ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும் துறையின் உபகோட்டம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்தின் உள்ளடங்கிய ஒன்றியப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் தேவைகள் கணக்கிடப்பட்டு அதன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைப்படி, ஆண்டு இறுதியில், தேவையில்லை என்று தெரியும் பகுதியிலிருந்து தேவையுள்ள பகுதிகளுக்கு நிதி மறு ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படும். (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(4)	(5)	(6)
12	24	94	குழு ஆய்வுப் பயணம் மேற்கொண்ட மாவட்டங்கள் சிலவற்றில் இத்திட்டம் (பழைய பம்பு செட்டுகளுக்கு பதிலாக புதிய பம்பு செட்டுகள் வழங்கும் திட்டம்) குறித்து விவசாயிகள் அறிந்திருக்கவில்லை என குழுவிற்குத் தெரிய வந்தது. எனவே, வரும் நிதி ஆண்டில் (2008–2009) இத்திட்டம் நீட்டிக்கப்படும் நேர்வில் அனைத்து மாவட்ட விவசாயிகளும் இது குறித்து அறிந்து கொள்ளும் வகையில் விளம்பர உத்திகளைத் துறை மேற்கொள்ள வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.	பழைய பம்பு செட்டுகளுக்கு பதிலாக புதிய பம்பு செட்டுகள் வழங்கும் திட்டம் விவசாயிகள் மத்தியில் ஏற்கெனவே பிரபலம் அடைந்துள்ளது. விவசாயிகளிடம் உள்ள அமோக வரவேற்பினால் 2007–2008 ஆம் ஆண்டிற்கான இலக்கு அடையப்பட்டுள்ளது. 2008–2009, 2009–2010 ஆண்டுகளில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இலக்குகள் முழுமையாக அடையப் பெற்றுள்ளது. 2010–2011 ஆம் ஆண்டு இத்திட்டம் எரிசக்தித்துறைக்கு மாற்றப்பட்டு விட்டதால், தற்பொழுது வேளாண்மைப் பொறியியல் துறையில் இத்திட்டம் நடைமுறையில் இல்லை. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது–2/2007–62, நாள் 6.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
			(4)
13	25	103	உதகை வணிக தோட்டக்கலை நிலையத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.395.00 இலட்சம் செலவில் தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைக்க அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள பிரேரணை மீது விரைந்து நடவடிக்கை எடுத்து அப்பயிற்சி மையம் அமைக்கப்பட துறை தரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

குழுவின் குறிப்புரை
(6)

உதகமண்டலம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நிதியுதவியுடன் ரூபாய் 144.82 இலட்சம் செலவில் இணைப்பில் கண்டுள்ளவாறு உட்கட்டுமான வசதிகள் மேற்கொள்ளப்பட்டு, ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது.

துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வ. எண்.	திட்டத்தின் பெயர்	கட்டிமுடிக்கப்பெற்ற உட்கட்டமைப்பு வசதிகள்	ஆண்டு	நிதியுதவி வழங்கிய திட்டம்	மதிப்பு (ரூபாய் இலட்சம்)
1.	மூலிகைப் பயிர்களின் பூங்கா அமைத்தல்	பயிற்சி அரங்கு (கொள்ளளவு 125 பயிற்சியாளர்கள்) 350 வகை மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் கொண்ட பூங்கா நாற்காலிகள் ஒளி ஒலி சாதனங்கள் ஆகியவை	2010–2013	மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் HADP	32.00
2.	கழிப்பறை வசதிகள் கட்டுதல்	கழிப்பறை வசதிகள் கட்டுதல்	2011–2012	மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் HADP	4.47
3.	நீலகிரி மாவட்டத்தில் மூலிகைப் பயிர்கள் சாகுபடியை பெருக்குவதற்கு மூலிகைப் பயிர்கள்	பசுமைக் குடில் (500 சதுர மீட்டர்) பணிக்கூடாரம் (250 சதுர மீட்டர்)	2016–2018	சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் SADP தமிழ்நாடு	13.25

	நாற்றாங்கால் அமைத்தல்	நாற்றுகளின் வளர்ச்சியை பெருக்க அவற்றை கடினப்படுத்தும் குடில் (250 சதுர மீட்டர்)		வேளாண்மைப் பல்கலைக்கழகம் Tamil Nadu Agricultural University	
4.	இயற்கை இடுபொருள் உற்பத்தியை அதிகரிக்க தேவையான உட்கட்டுமான வசதிகளை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்குதல்	ரிப்பன் பிளண்டர் அளவிடும் இயந்திரம் தானியங்கி எடை மற்றும் வெளியேற்றும் இயந்திரம் நொதிகலன்	2017–2018	சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் SADP	30.25
5.	நீலகிரி மாவட்டத்தில் மூலிகை மற்றும் மருத்துவப் பயிர்களின் சாகுபடியை பெருக்குவதற்கான ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்தல்	மரவீட்டுப் பண்ணையின் உட்கட்டமைப்பு, மூலிகை செடி தயாரிப்பு நுண்ணுயிர் மற்றும் உயிர் கட்டுப்பாட்டு கலன் நிறுவுதல், அங்கக வேளாண்மை, மூலிகைப் பயிர்களின் மதிப்பூட்டல்,	2018–2019	சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் SADP	36.85

		பண்ணை இயந்திர சக்தி மற்றும் மழை நீர் சேகரிப்புத் திட்டம் – வேலை நடைபெற்று வருகின்றது (2019–2020)			
6.	நீலகிரி மாவட்ட மலைவாழ் மக்கள் நேரடி பயன்பெறும் வகையில் அங்கக வேளாண் பண்ணையமைத்தல், காளாண் வளர்ப்பு மற்றும் ஊட்டச்சத்து மிக்க காளாண் தயாரிப்பு அறை	மலைவாழ் மக்களுக்கான காளாண் வளர்ப்பு மற்றும் பயிற்சி அறை வேலை நடைபெற்று வருகின்றது (2019–2020)	2018–2019	சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் SADP	22.00

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது–2/2007–62, நாள் 6.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	31	128	தஞ்சாவூர்–நாகப்பட்டினம், தேனி–மதுரை மற்றும் வேலூர் விற்பனைக் குழுக்களின் இடையே சொத்துக்களைப் பிரித்து கொடுப்பதில் உள்ள குறைபாடுகளை, தணிக்கையின் அறிக்கையைப் பெற்று, விரைவில் தீர்த்து வைக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

குழுவின்
குறிப்புரை
(6)

துறையின் பதில்
குழுவால் ஏற்றுக்
கொள்ளப்பெற்றது.

1. **தஞ்சாவூர்– திருவாரூர் – நாகப்பட்டினம்**

உள்ளாட்சி நிதித்தணிக்கை பரிந்துரையின் அடிப்படையில் தஞ்சாவூர் விற்பனைக்குழுவின் சொத்து தொகையிலிருந்து, ரூ.3,53,55,683.00 (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து அறுநூற்று எண்பத்தி மூன்று மட்டும்) தொகையினை திருவாரூர் விற்பனைக் குழுவிற்கும், ரூ.80,56,177.00 (ரூபாய் எண்பது இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து நூற்று எழுபத்தி ஏழு மட்டும்) தொகையினை நாகப்பட்டினம் விற்பனைக் குழுவிற்கும் பிரித்து அளிக்க அரசாணை (நிலை)எண் 251, வேளாண்மைத் (வேவி2) துறை, நாள் 23.12.2013–ன்படி உத்தரவிடப்பட்டு, அதன்படி சொத்து தொகையும் பிரித்தளிக்கப்பட்டு விட்டது.

2. **மதுரை–தேனி–திண்டுக்கல்**

உள்ளாட்சி நிதித்தணிக்கை பரிந்துரையினை அடிப்படையாகக் கொண்டு, மதுரை விற்பனைக் குழுவின் சொத்து தொகையிலிருந்து, ரூ.2,53,77,957/– (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஏழு மட்டும்) தொகையினை திண்டுக்கல் விற்பனைக் குழுவிற்கும், ரூ.80,39,269/– (ரூபாய் எண்பது இலட்சத்து மூப்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று அறுபத்து ஒன்பது மட்டும்) தேனி விற்பனைக் குழுவிற்கும் பகிர்ந்தளிக்க அரசாணை (நிலை) எண் 139, வேளாண்மை (வேவி2) துறை, நாள் 2.7.2013ன்படி உத்தரவிடப்பட்டு, அதன்படி சொத்து தொகையும் பகிர்ந்தளிக்கப்பட்டுவிட்டது.

3. **வேலூர் – திருவண்ணாமலை**

உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்ககம் தன் திருந்திய பரிந்துரையில், திருவண்ணாமலை விற்பனைக் குழு, ரூ.9,80,976/– ஐ (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பதாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஆறு மட்டும்) வேலூர் விற்பனைக் குழுவிற்கு வழங்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரையினை திருவண்ணாமலை விற்பனைக் குழுவும், வேலூர் விற்பனைக் குழுவும் ஏற்றுக் கொண்டுவிட்டன. எனவே, திருவண்ணாமலை விற்பனைக் குழு மற்றும் வேலூர் விற்பனைக் குழுக்களுக்கிடையே சொத்து பிரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம் (4)
(1)	(2)	(3)	
15	32	131	நாகப்பட்டினம் மாவட்டம், மங்கநல்லூரில் துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படுவதற்கான அரசாணையைப் பெற்று விற்பனைக் கூடம் விரைவில் அமைக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			மங்கநல்லூரில் பெறப்படும் வேளாண் விளைபொருட்களின் வரத்து குறைவாக இருப்பதால், மங்கநல்லூரில் துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கத் தேவையில்லை என்று நாகப்பட்டினம் விற்பனைக்குழு செயலரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், மங்கநல்லூரிலிருந்து 10 கி.மீ தொலைவில் மயிலாடுதுறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும், 15 கி.மீ தொலைவில் குத்தாலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் அமைந்துள்ளன. மங்கநல்லூர் பகுதி விவசாயிகள் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை பயன்படுத்தி வருகின்றனர்.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம் (4)
(1)	(2)	(3)	
16	38	158	சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பெருநகரங்களின் அருகில், அழுகும் பொருட்களான காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றுக்கு அனைத்துக் கட்டமைப்புகளுடன் கூடிய விற்பனை முனையங்கள் விரைவில் அமைக்கப்பட வேண்டுமென்றும் இது குறித்து குழுவிற்கு அறிக்கை ஒன்று அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றை பதப்படுத்தி விற்பனை செய்திட ஏதுவாக அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன விற்பனை முனையங்கள் பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்கேற்புடன் கோவை, மதுரை மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் அமைக்க திட்டமிடப்பட்டது. இத்திட்டத்திற்கு கலந்தாலோசிக்கப்பட்ட நிறுவனமாக இட்காட் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது. **<u>கோவை விற்பனை முனையம்</u>** கோவை பகுதிக்கான விற்பனை முனையம், ஈரோடு மாவட்டம், பெருந்துறை, சிப்காட் வளாகத்தில் 47.50 ஏக்கர் பரப்பில் ரூ.120.62 கோடி மதிப்பில் அமைக்கத் திட்டமிடப்பட்டது. ஸ்பாக் விற்பனை முனையம் லிமிடெட் (SPAC Terminal Market Ltd) நிறுவனத்தால் அமைக்கத்தக்க வகையில் இதற்கான ஒப்பந்தம் 27.02.2011–இல் கையெழுத்திடப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 03.03.2012 அன்று பணிகள் துவக்கி வைக்கப்பட்டது. மேற்கண்ட சூழ்நிலையில், தற்பொழுது ஸ்பாக் நிறுவனம் இத்திட்டத்திலிருந்து விலகிக்கொண்டது. அதனையடுத்து, இத்திட்டத்தினை கைவிடுவது தொடர்பான செயற்குறிப்பின் மீது மத்திய அரசின் இசைவு பெறப்பட்டு, திட்டத்தினை கைவிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

மதுரை விற்பனை முனையம்

மதுரை பகுதிக்கான விற்பனை முனையம் அமைக்க மதுரை மாவட்டம், மேலூர் தாலுக்கா, முக்கம்பட்டி மற்றும் திருவாதவூர் கிராமங்களில் 50 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு ரூ.120.06 கோடி மதிப்பில் திட்டமிடப்பட்டது. இதனை செயல்படுத்தும் வகையில் M/s.ஆர்.ஆர்.இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம் மற்றும் கூட்டமைப்பின் M/s. பூமி அக்ரி மார்கெட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் சிறப்பு நோக்க அமைப்பாக செயல்பட தேர்ந்தெடுக்கப்பட்டது. இம்முனையம் அமைப்பதற்கான இயக்குதல் மற்றும் மேலாண்மை வளர்ச்சி ஒப்பந்த வரைவுக்கான (Operation Management and Development Agreement - OMDA) ஒப்புதல் ஆணை 12.07.2017–இல் அரசு வழங்கியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக 19.56.5 ஹெக்டேருக்கான குத்தகை தொகை ரூ.96.75 லட்சம் அரசு கணக்கில் செலுத்த ஏதுவாக தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கு செலுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்திடம் கோரப்பட்டது. ஆனால் அத்தொகையினை அந்நிறுவனம் செலுத்தாத காரணத்தால் இத்திட்டத்தினை செயல்படுத்துவதிலிருந்து M/s. R.R.Industries Ltd., நிறுவனம் மற்றும் அதன் கூட்டமைப்பான M/S Bhumi Agri Markets Pvt Ltd., நிறுவனத்தை ரத்து செய்து, திட்டத்தினை கைவிட முடிவு செய்யப்பட்டு, தற்போது மத்திய அரசின் அனுமதி எதிர் நோக்கப்படுகிறது.

சென்னை விற்பனை முனையம்

சென்னை பகுதிக்கான விற்பனை முனையம் அமைக்க காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் தாலுக்கா, நாவலூர் கிராமத்தில் 35 ஏக்கர் (14.06.05 ஹெக்டேர்) பரப்பளவில் செயல்படுத்தும் விதமாக ரூ.135.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க திட்டமிடப்பட்டது. இதனை M/s. URC Constructions பிரைவேட் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்தினால் M/s. உழவர் களஞ்சியம் லிமிடெட் சிறப்பு நோக்க அமைப்பாக செயல்பட தேர்ந்தெடுக்கப்பட்டது. இம்முனையம் அமைப்பதற்கான இயக்குதல் மற்றும் மேலாண்மை வளர்ச்சி (Operation Management and Development Agreement - OMDA) 12.07.2017-இல் வழங்கப்பட்டது.

இம்முனையத்தை அமைப்பதற்காக தேர்வு செய்யப்பட்ட நிலத்தின் மதிப்பு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு விதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இது தொடர்பான தெளிவுரை வழங்குமாறு வருவாய்த் துறையிடம் கோரப்பட்டு, அத்துறையின் பதில் எதிர்நோக்கப்படுகிறது.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
17	41	172	தமிழ்நாட்டில், உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள் அனைத்து மாவட்டங்களிலும் அதிக அளவில் ஏற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளை துறை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	தேசிய உணவு பதப்படுத்துதல் இயக்கம் (NMFP), 2012–2013 முதல் மாநில முகமையான வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வந்தது. இவ்வியக்கம் மத்திய மற்றும் மாநில அரசின் 75:25 என்ற விகிதத்தில் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைத்திட 25 விழுக்காடு மானியம் தொழில் நுட்ப கட்டுமானத்திற்கும் மற்றும் பதப்படுத்தும் உபகரணங்களுக்கும், அதிகபட்சமாக ரூ.50.00 லட்சம் மானியமாக வழங்கப்பட்டு வந்தது. இதுவரை 47 திட்டங்களுக்கு சுமார் ரூ. 10.99 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 2015–2016–ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்திற்கான மானியம் மத்திய அரசால் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுவிட்டது. இந்நிலையில், உணவுப் பதப்படுத்துதலின் இன்றியமையாமையைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாட்டின் "உணவுப் பதப்படுத்தும் கொள்கை–2018" உருவாக்கப்பட்டு, 12.12.2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இக்கொள்கையின் கீழ் உணவு வர்த்தகர்கள்/தொழில் முனைவோர் ஆகியோருக்கான பல்வேறு சலுகைகள் மற்றும் ஆதரவு நடவடிக்கைகள் விரிவாக அறிவிக்கப்பட்டுள்ளன. நில ஒதுக்கீடு, தண்ணீர் வசதி, மின்சார வசதி, முதலீட்டு மானியம் நீட்டித்தல், வட்டி மானியம் வழங்குதல், வரிச்சலுகைகள், முத்திரைக் கட்டண விலக்கு, சந்தைக் கட்டண விலக்கு, திறன் மேம்பாட்டு பயிற்சி, ஏற்றுமதி சலுகைகள் மற்றும் பல சலுகைகள், முன்னுரிமைகள் அளிக்கப்படும் என இக்கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. உணவுப் பதப்படுத்தும் கொள்கை 2018 –இன் படி தமிழகத்தில் சிறு, பெரு மற்றும் மிகப்பெரிய உணவுப் பூங்காக்கள் ஏற்படுத்தப்படும்.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 10 இடங்களில் உணவுப் பூங்காக்கள் அமைக்கப்படும் என 2018–2019 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் படி, திருநெல்வேலி மாவட்டம் கங்கை கொண்டானில் உணவுப்பூங்கா அமைத்து சிப்காட் இடமிருந்து 50 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான திட்ட அறிக்கை நாப்கான்ஸ் (NABCONS) மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
18	43	182	2007–2008–ஆம் ஆண்டில், தருமபுரி மாவட்டத்தில், தோட்டக்கலைத் துறையின் கீழ், நுண்ணீர் பாசனம் அமைக்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கு (1181 எக்டேர்; ரூ.331.68 இலட்சம்) எய்தப்படாததற்கான காரணங்களை ஆராய்ந்து அது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்கவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	2006–2007 ஆம் ஆண்டு முதல் நுண்ணீர் பாசனத் திட்டம் தோட்டக்கலை துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2007–2008 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையின் கீழ் நுண்ணீர் பாசனம் அமைக்க, 1181 எக்டர் பரப்பில், (ரூ.331.68 இலட்சம்) இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. திட்டம் ஆரம்பித்த வருடங்களில் விவசாயிகளிடம் போதிய வரவேற்பு இல்லாமல் இருந்ததால், தொடர்ந்து விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி விவசாயிகளை இத்திட்டத்தின் கீழ் பயனடைய ஊக்குவித்து, 2007–2008 ஆம் ஆண்டு 264.40 எக்டர் பரப்பில் (76.15 இலட்சம்) சாதனை அடைய முடிந்தது. பின்னர் 2008–ஆம் ஆண்டு முதல் விவசாயிகளிடம் தொடர்ந்து நல்ல விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, துறை மறுசீரமைப்பு செய்யப்பட்ட பிறகு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. 2008–2009–இல் 640.95 எக்டர் பரப்பிலும் (ரூ.184.59 இலட்சம்), 2009–2010–இல் 876.50 எக்டர் பரப்பிலும்(ரூ.252.43 இலட்சம்) சாதனை எய்தப்பட்டுள்ளது. இது தொடர் திட்டமாக இருப்பதால் நிதியினம் ஒப்படைப்பு செய்யப்படாமல் அடுத்தடுத்த வருடங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுள்ளது என்ற விவரமும் தெரிவிக்கப்படுகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
19	45	188	தோட்டக்கலைத் துறையில், தோட்டக்கலைப் பயிர்களுக்கு நுண்ணீர்ப் பாசனம் அமைக்க, மானியம் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறையே கரும்பு பயிருக்கும் பின்பற்றப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கரும்பு பயிருக்கு நுண்ணீர்ப்பாசனம் அமைப்பதற்கு மானியம் வழங்குவதற்கு, தோட்டக்கலைத் துறையில், தோட்டக்கலைப் பயிர்களுக்கு பின்பற்றப்படும் அதே நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
20	46	189	கரும்பு பயிரைப் பொறுத்த வரையில் மானியம் வழங்குவதில் உள்ள சிக்கல்களைக் களைந்து, கரும்பு விவசாயிகளுக்கு மானியம் உரிய காலத்தில் கிடைக்கப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாவட்ட அளவில் உள்ள துறை அதிகாரிகளுக்குத் தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கரும்பு பயிருக்கு நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கு உரிய மானியம் வழங்குவதில் இருந்த இடர்பாடுகள் களையப்பட்டு நுண்ணீர் பாசனம் அமைக்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் மானியம் வழங்க தேவையான உத்தரவுகள் மாவட்ட அளவில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் வழங்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், 2011–2012– ஆம் ஆண்டு முதல் கரும்பு விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கான மானியம் விரைவில் கிடைத்திட ஏதுவாக நடைமுறைகள் எளிதாக்கப்பட்டு, வேளாண்மைத் துறை மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(4)	(5)	(6)
21	50	199	கரும்பு விவசாயிகள் நட்டம் அடையாமல் இருக்க, சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறனை மேம்படுத்தும் வகையில், ஒவ்வொரு பகுதியிலும் உள்ள 3 அல்லது 4 சர்க்கரை ஆலைகளுக்கு ஒரு உபரி அரவை இயந்திரம் என்ற அளவிலாவது அரவை இயந்திரம் நிறுவப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	கரும்பு விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படாமல் இருக்க ஆலைகளின் அரவைத் திறனை மேம்படுத்தும் வகையிலும், அறுவடை செய்யப்பட்ட கரும்பை உரிய நேரத்தில் அரவை செய்திட ஏதுவாகவும், சர்க்கரை ஆலைகளின் நிதி நிலை மற்றும் ஆலைகளின் அரவைத் திறன், இயந்திரங்களின் அமைப்பு (configuration) வேறுபாடு ஆகியவற்றை பரிசீலனை செய்து ஆலைகளை இயக்குவதற்குத் தேவையான பேரிங்ஸ் (bearings) உருளைகளின் பல்சக்கரம், டி.சி.எஸ். பேனல் போர்டு (DCS) உள்ளிட்ட பொதுவான முக்கிய உதிரி பாகங்கள் (Common Critical Spares) அருகிலுள்ள சர்க்கரை ஆலைகளில் கொள்முதல் செய்து, தேவையின் அடிப்படையில் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது!–2/2007–62, நாள் 6.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
			(4)
22	51	201	தற்போது இயங்காமல் உள்ள மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுரா சர்க்கரை ஆலை, மதுரை (பொதுத்துறை) மற்றும் அருணாச்சலம் சர்க்கரை ஆலை, திருவண்ணாமலை (குனியார் துறை) ஆகிய மூன்று ஆலைகளையும் தனியாருக்கு குத்தகை விடாமல் ஆலைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்காக மீண்டும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசே மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

குழுவின் குறிப்புரை
(6)
துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

மதுராந்தகம் கரும்பு விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு இயங்காமல் இருந்த மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை கடந்த 2010–2011 பருவம் முதல் மீண்டும் அரவை துவங்கி செயல்பட்டு வருகிறது. மதுரை சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரை மேற்படி சர்க்கரை ஆலைக்கு வரையறுக்கப்பட்ட பகுதிகள் மதுரை நகருக்கு அருகில் உள்ளதாலும், விளை நிலங்கள், குடியிருப்புப் பகுதிகளாகவும், தொழிற் சாலைகளாகவும் மாறி வருவதாலும், தேவையான கரும்பு கிடைக்கும் வாய்ப்பு மிகக் குறைவாக உள்ளதால் அதிக நிதி இழப்பு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு மேற்படி சர்க்கரை ஆலையை இயக்குவது சாத்தியமில்லாதது என்ற காரணத்தால், ஆலையின் சொத்துக்களை விற்க நிறுவாக சட்டப்படி தேவைப்படும் இயக்குநர்கள் குழு ஒப்புதல் மற்றும் பங்குதாரர்களின் ஒப்புதல் 29.9.2014–இல் நடைபெற்ற 39வது வருடாந்திர பேரவைக் கூட்டத்தில் பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் 22.11.2012 மற்றும் 28.1.2013 நாளிட்ட கடிதங்களில் மதுரை சர்க்கரை ஆலையை விற்பனை செய்வது குறித்து அரசின் உத்தரவிற்கான முன்மொழிவு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள அருணாச்சலம் தனியார் சர்க்கரை ஆலைக்கு நிதி உதவி செய்துள்ள வங்கிகள் உள்ளிட்ட இதர நிறுவனங்கள் வழக்கு தொடர்ந்து மேற்படி சர்க்கரை ஆலையை முடக்குவதற்கான (Liquidation) நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. எனவே, மேற்படி ஆலையை மீண்டும் இயக்குவதற்கு ஏற்ற சாதகமான சூழ்நிலை எழவில்லை.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – 3

துறையிடமிருந்து பதில் வரப்பெற்று நடவடிக்கைகள் மேலும் தொடரப்பெற வேண்டிய பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
1	4	23	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ், ஆர்வலர் குழுக்கள் மூலம் செம்மை நெல் சாகுபடி செயல் விளக்கங்களை ஒவ்வொரு ஒன்றியத்திலும் வேளாண்மைத் துறை அலுவலகத்தினை ஒட்டிய பகுதியில் அமைத்து, அனைத்து விவசாயிகளும் அதனை நேரில் கண்டுணர்ந்து இம்முறையினைப் பின்பற்றி நெற்பயிர் செய்ய உரிய நடவடிக்கைகளைத் துறை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், கால்நடை வளர்ப்பு, மீன்வளம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகிய துறைகளுடன் இணைந்து நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்தி உலக வங்கி நிதியுதவியுடன் தமிழகத்தில் நீர்வள நிலவளத் திட்டம் 2007–2008 30.6.2015 வரை தொிவு செய்யப்பட்ட 61 பாசன பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் திருந்திய நெல் சாகுடி செயல் விளக்கங்கள் 2007–2008 முதல் 2013–2014 வரை மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.

(பரப்பு : எக்டர்)

ஆண்டு	ஆர்வலர் குழுக்கள் (எண்கள்)	செயல் விளக்கப் பரப்பு (Demo Area)	செயல் விளக்க ஈர்ப்பு பரப்பு (Impact Area)
2007–2008	182	912	0
2008–2009	386	1934	920
2009–2010	897	4485	11464
2010–2011	1886	9433	35150
2011–2012	1498	7490	34626
2012–2013	2182	10910	49796
2013–2014	250	1250	5266

குழுவின் குறிப்புரை
(6)

அனைத்து விவசாயிகளும் நேரில் கண்டுணர்ந்து, பயனடைந்திட வேளாண்மைத் துறை அலுவலகத்தினை ஒட்டிய பகுதியில் செம்மை நெல் சாகுடி முறையில் நெற்பயிரிட வேண்டும் என்பதே குழுவின் பரிந்துரையாகும். விவசாயிகள் இம்முறையில் பயிரிடப்பட்டு, பயனடையும் வகையில் மாற்றாக, செய்யப்பட்ட செயல் விளக்கம் பற்றிய குறிப்பினை குழுவிற்கு ஓர் அறிக்கையாக அனுப்பிவைக்கப் பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

மேற்காணும் திருந்திய நெல் சாகுபடி விளக்கப் பாத்திகளுக்கு விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டு வயல் விழாக்கள் மூலமாக பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இந்த முயற்சிகள் மூலமாக, திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பமானது விவசாயிகளிடையே பரவலானது. அவ்வாறு விரிவாக்கம் செய்த பரப்பளவுதான் ஈர்ப்பு பரப்பாக மேற்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறை அலுவலகத்திற்கு அருகாமையில் நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்படும் இடங்களில் திருந்திய நெல் சாகுபடி/இயந்திர நடவு சாகுபடி தொழில்நுட்ப முறையில் நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரம் தெரிவிக்கப்படுவதுடன், 2019–2020 ஆம் ஆண்டில் 2.12.2019 வரை 9.069 லட்சம் எக்டர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி/இயந்திர நெல் நடவு முறை கடைபிடிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதிகளாகிய சட்டமன்ற உறுப்பினர்களின் விருப்பப்படி, அவர்கள் சொல்லும் இடத்தில் நேரடி நெல் கொள்முதல் மையங்களை அமைத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்திட செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவர்களை நடவடிக்கை எடுக்க கோருமாறு இவ்வலுவலக நேர்முக கடித எண.நெ(மு)சி4/3238/19, நாள் 28.11.2019 வாயிலாக வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர் அவர்களுக்கு கடித வரைவு அனுப்பப்பட்டுள்ளது.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது/–2/2007–62, நாள் 6.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	10	46	இஞ்சி, உருளைக்கிழங்கு ஆகியவை போன்று கேரட், முட்டைகோஸ் போன்றவையும் அழுகுவதாலோ அல்லது நோயாலோ பாதிக்கப்படலாம் என்பதால் கேரட், முட்டைகோஸ் மற்றும் மலர்கள் ஆகிய பயிர்களுக்கும் தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டத்தினை விரிவுபடுத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கேரட், முட்டைகோஸ் மற்றும் மலர்கள் ஆகிய பயிர்களை அறிவிக்கை செய்யப்பட்ட தோட்டக்கலை பயிர்களின் பட்டியலில் சேர்த்து, தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்த தகுந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது/–2/2007–62, நாள் 6.8.2019)	துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கையாக அனுப்பிவைக்கப் பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	குழுவின் குறிப்புரை
			(4)	(6)
(1)	(2)	(3)		
3	27	107	கிருஷ்ணகிரி மாவட்டம், பையூர் வேளாண்மைப் பல்கலைக் கழக மண்டல ஆராய்ச்சி நிலையத்திற்கு சுற்றுச்சுவர், தார்ச்சாலை உட்பட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் விரைவில் செய்து தரப்படவேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.	

துறையின் பதில்

(5)

கிருஷ்ணகிரி மாவட்டம் பையூர் வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையத்தின் சுற்றுச்சுவர், சாலையை அகலப்படுத்தும் பணியின் போது இடிக்கப்பட்டு விட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, அரசு கட்டிடங்களில் அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம், கால்நடை மருந்தகம், நூல் நிலையம், கட்டிடங்கள் கட்டிடவும் மற்றும் சுடுகாடு, இடுகாடு ஆகியவற்றிற்கு சுற்றுச்சுவர் கட்டிடவும் மட்டுமே அரசு விதி முறைகள் உள்ளதென தெரிவித்ததால் பல்கலைக் கழக நிதியின் மூலம் சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டுள்ளதோடு மீதமுள்ள பணிகளை நபார்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)

கிருஷ்ணகிரி மாவட்டம், பையூர் வேளாண்மை பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ள மீதமுள்ள பணிகளை விரைவில் முடிக்க துறையை குழு மீண்டும் வலியுறுத்துகிறது. மேலும், இது குறித்து துறை எடுத்த மேல் நடவடிக்கை குறித்து விரிவான அறிக்கையை குழுவிற்கு அளிக்கவேண்டும் என பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
			(4)
(1)	(2)	(3)	
4	29	122	தற்போது வாடகை இடத்தில் செயல்பட்டு வரும் 110 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு சொந்த இடம் விரைவில் வாங்கப்படவும், அவற்றுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவும் துறை முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக துறையின் கீழ் இயங்கும் 26 விற்பனைக் குழுக்களின் கீழ் 282 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 197 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் சொந்த இடத்தில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 85 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், 7 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு சொந்த இடம் வாங்கப்பட்டுள்ளது மற்றும் ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்த கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. 77 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு சொந்த இடம் வாங்கவும், அரசு நிலத்தினை மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சொந்த இடம் கிடைத்தவுடன் அடிப்படை வசதிகளுடன் கூடிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	துறையால் சொந்த கட்டடம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்த பின்னர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்று குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	
5	30	125	கன்னியாகுமரி மாவட்டம், ஈத்தாமொழி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை துறை விரைந்து எடுக்க வேண்டும் என்றும், கட்டடம் கட்டித்தரப்பட்டது குறித்து குழுவிற்கு தெரிவிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			கன்னியாகுமரி விற்பனைக்குழுவின் கீழ் இயங்கும் ஈத்தாமொழி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு குடிநீர் மற்றும் மின் இணைப்பு வசதியுடன் கூடிய அலுவலக கட்டடம், சேமிப்பு கிட்டங்கிகள், உலர்களம் ஆகிய வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடம் விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் நுகர்வோர்களின் பயன்பாட்டிற்காக கட்டுவதற்கு சொந்தமான நிலம் தேவைப்படுவதால், ஈத்தா மொழி பகுதியில் சுமார் 5 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் ஒதுக்கீடு செய்து தரும்படி மாவட்ட நிர்வாகத்திடம் கோரப்பட்டது. தகுதியான அரசு புறம்போக்கு நிலம் ஏதுமில்லை என அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியரால் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தகுதியான நிலமானது அரசு வழிகாட்டு மதிப்பின்படி தனிநபர்களிடம் கையகப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	கன்னியாகுமரி மாவட்டம் ஈத்தாமொழி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை துறை விரைந்து எடுக்க வேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
6	37	152	கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் தக்காளிக்கு குளிர்சாதனக் கிடங்கு கட்டித்தரப்படுவதற்கான திட்ட அறிக்கை அரசுக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் அக்கிடங்கு விரைவில் அமைக்கப் பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மூலமாக தமிழ்நாட்டில் 5 இடங்களில் (தக்காளிக்கென பாலக்கோட்டில், மாங்காய்க்கென கிருஷ்ணகிரியில், வெங்காயத்திற்கென பொங்கலூரில், திராட்சைக்கென ஓடைப்பட்டியில் மற்றும் தேங்காய்க்கென பட்டுக்கோட்டையில்) குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. மேலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தக்காளிக்கென மேச்சேரியிலும், காய்கறிகளுக்கென குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள் கிணத்துக்கடவு மற்றும் சிக்கதாசம்பாளையம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	குழுவின் பரிந்துரை உடுமலைப் பேட்டையில் தக்காளிக்கென குளிர்சாதனக் கிடங்கு அமைப்பது தொடர்பானதாகும். எனவே, மேற்படி கருத்துருவிற்கு துறை உரிய முறையில் முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என்று குழுமீண்டும் வலியுறுத்துகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	40	167	திருச்சி மாவட்டத்தில் வாழைக்கான ஏற்றுமதி மண்டலம், மேலே பத்தி எண் 163–ல் தெரிவித்துள்ள அனைத்துக் கட்டமைப்பு வசதிகளுடன் விரைவில் அமைக்கப்பட வேண்டுமென்றும் இதற்கான மைய அரசின் அபீடா (APEDA) நிறுவனத்தின் ஒப்புதலை விரைந்து பெற வேண்டும் என்றும் மேலும் இந்த மண்டலம் அமைக்கப்பட்டது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்கவேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருச்சி மாவட்டத்தில், வாழைக்கென ரூ.10.00 கோடி திட்டச் செலவில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக தனியார் துறை பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைப்பதற்கான கருத்துரு மைய அரசின் அபீடா (Agriculture and Processed Food Products Export Development Authority) நிறுவனத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. மேற்கண்ட கருத்துருவினை TIES திட்டம் மூலமாக செயல்படுத்திட APEDA தெரிவித்ததின் அடிப்படையில் அத்திட்ட வழிமுறைகளின்படி விரிவான திட்ட அறிக்கை நாப்கான்ஸ் நிறுவனம் மூலம் தயாரிக்கப்படுகிறது. (வேளாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 23681/பொது1–2/2007–62, நாள் 6.8.2019)	குழுவின் பரிந்துரை 2008–இல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதற்கான திட்ட அறிக்கை நாப்கான்ஸ் நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது என துறை தெரிவித்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. எனினும் திருச்சியில் வாழைக்கான ஏற்றுமதி மண்டலம் அமைக்க துறை இதுவரை மேற்கொண்ட தொடர் நடவடிக்கை குறித்த விவரங்களை அறிக்கையாக அளிப்பதுடன் விரைவில் ஏற்றுமதி மண்டலம் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென குழு வலியுறுத்துகிறது. கி. சீனிவாசன், செயலாளர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS